கடலூர் மத்தியபுரி

மரகத வல்லி மாலை

ப. ஜெயங்கொட முதலியார்

Q25:417
N21.
224453

297

உ
திருச்சிற்றம்பலம்.



19 JAN 1921

கூவலூர் மத்தியபுரி

# மாகதவல்லி மாலை.

இஃது
மே. முத்துக்கவுண்டர் அபிப்பிராயப்படிக்கு,
செங்குந்தரில் பாஞ்சோதியார் பரம்பரை,
வெள்ளாங்கோயில் பெரியதனம்,
**டா. செங்கோட முதலியாரால்**
இயற்றப்பட்டு,
சேலம், எஸ். எம். நாராயணசாமிபிள்ளை
அவர்களால்,
தமது
பட்டக்கார் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

லை] 1921. [அணா 4.

உ

ஓம்.

மரகதவல்லி பாதமே துணை.



# மத்தியபுரி மரகதவல்லி மாலை.

(கட்டளைக் கலித்துறை.)

1. திருவே தழைத்த மனமே தெளிந்த தேனின் சுவை
யுருவே யடிய ருளமே வினைக ளொழிக்கலந்த
குருவே யகந்தா முதலே மரகத மாலைசெப்ப
வரவே புழைக்கை நால்வா யானைக்குவந்தனமே.

2. சுளித்தோடு வாளைநதி புனற்றேங்கிச் செந்நெலிகார்
தளிர்த்தாடக் குலைசாய்த்த கழனியுஞ் சோலையுந் தண்டலை [னீர்
கிளித்தோடி மீனினம் பாளைமதப் பருகிப்பின் [illegible] [யின்வந்து
களித்தாடு மல்லல்வளம் மத்யபுரி மரகதமென் கருத்தினிலே.

3. மாயப்பிறவி மையலிற் சிக்கி மயக்குமெனைத்
தாயற்ற பிள்ளை யாக்கினையோ சக மேழுமுண்ட
மாயப் பெருமான் றங்கையே மரகத மாவல்லியே
காயக் கடத்தை நம்பினே னென்செய்வேன் கண்ணுதலே.

4. வணங்குங் கயற்கண் வதனமுஞ் சிவந்த வாயிதழுங்
கணங்குழைச் செவியுஞ் சிந்தூரப் பொட்டழகுங் காகமலை
யிணங்குபொற் பட்டாடை யிடையுந்தி மார்பழகி யிருகழ [லின்
மணிகளின் கலின்னோசை யிசைபேச வருகு மரகதவல்லியே.

5\. சுடுகாட்டி லாடும் பிஞ்ஞகன் பாகத் துடியிடையா
ளடிகாண மறைபாடு மடியார்க ளுடன்கூடி யலரிமல்லி
செடிகோடு விரித்த மலர்தூவி மரகதத்தைச் சிந்தைநண்ண
நடங்காட்டி வருவா ளிர்தய மத்யபுரி நாயகியே.

6\. பச்சைநிறமேனி மரகத வல்லி பதாம் புயத்தி
லிச்சைவைத் தேத்தித் தொழாத பாதகரை யமபடர்கள்
நச்சுக்கண் பார்வை யுறுத்த வசனம்பேசி நலியுமன
மச்சப்படாமல் மரகதவல்லி பெயரறைகுதுமே.

7\. மாடோட்டி யண்ணன் பேயோட்டி புருஷன் மைந்தர்களோ
கோடாட்டி யானைமுக னுக் கிளைய குமரன்மனத்
தோடாடி வள்ளி தெய்வானை மாமி திருப்பதத்தை
யேடான மலர்தூவி மரகதத்தாட் டுணையை யிறைஞ்சுதுமே

8\. கருவாயிற் பட்டதுமி நாதஞ் சிசுக்கைசுமென்றவ்
வுருவாகி வந்துமிக மீதிருந் துழைத்த மன
முருகாத நெஞ்சே கடைவழிக் கேதுதுணை யுற்றுடைந்து
பெருகாதல் கொண்டு மரகத வல்லி யருள்பேறுதுமே.

9\. திங்களுங் கங்கையுங் கொன்றையுஞ் சூடுஞ் சிற்பரத்தை
பங்குகொண் டாடும் பதாம்புயத்தி பச்சை மரகதத்தி
கிங்கிணி யாடக் குழலாட வடியவர் சிந்தைதொறும்
தங்கினி தாடும் மரகத வல்லிபதந் தஞ்சமென்னே

10\. கண்டிற் சுவைத்த மறைமொழி யோதாத கசடர்களை
நெண்டிப் புழுக்கள் துளைக்கு மாபாவி நிரயமதில்
கொண்டுபோய் போடென்றெமபடாள் சொன்ன கோபமதை
கண்டபோ தந்தன் தொண்டரைக்கா மரகத கலாவல்லியே.

11\. மூலத் துதித்த சைவக்கொழுந்தே தந்தை வேள்விசெய்ய
ஆலத்தை யுண்ட சிவபெருமானை மதியாததினால்
மாலொத்த மேனி வேர்வையில் வருவீர பாகுவிற்கு
கோலொத்த வேள்விக்குலைத்து வாவென்று விடைகொடுத்த
[வளே

12\. நாகஞ்சுமந்த பார்மிசை தோன்றியும் நலியுமிந்தத்
தேகஞ்சுமந்து திரிகுவனோ இருந் தொண்டனிடம்

பாருஞ் சுவைத்தமிழ் பேசி வெண்காட்டாள் பிள்ளையுணப்
போகுஞ் சிவபிரான் மனையாட்டி மரகதப் பூங்கொடியே.

13. துன்பக் கடலிற் சிக்குண்டு கரைகாணு தேங்குமெனை
அன்பர்க் குத்தொண்டன் சுடுகாட்டிலாடி யரவணிந்தோன்
நண்பர்க் களித்த சாயூச்ச வீடுநமக் களிக்க
யின்பந் தழைத் தானுடன் வருவாள் மரகதத்தீஸ்பரியே

14. மாழை நிறத்தி மதிமுகத்தி வையகத்தி மங்களத்தி
தாழை நிறத்தி சமர்த்தி தருமத்தி தபத்திமனக்
கோழை துறத்தி குண்டத்தி கோபத்தி கொம்பனத்தி
ஏழை மனத்தி லெஞ்ஞான்று மரகதத்தி விருப்பவளே.

15. வேதாந்த வீட்டில்நடமாடும் மரகதமெய்ப் பொருட்குப்
பாதார விந்த மலர்தூவி முப்போது பணிந்தவர்கள்
நாதாந்த ங்கடந்ததுரியாதீதப் பொருளை நன்றுதலாற்
போதாந்த சித்திதந்தாளும் மரகதப் பொற்கிளியே.

16. கானமயி லேறு மீராறு கையுடைய கந்தனுக்கும்
யானைமுக முடனே மூஷிகத்தி லேறினவன் நல்லன்னையே
வனமுக முடையமைத்தனனு நகைக்க யிறைங்கரத்தோன்
தானுமிரக்க லாமோ மரகதத் தற்பரியே.

17 தேகம் பெருக்கப் பிரவுண் விரும்பிச் சிந்தை யற்றுப்
போகும் பொழுதொன்றுதவாவென்றமறை பொய்த்திடுமோ
பாருஞ் சுவைத்த வேதாந்த மொழிபகரும் பாமனிடப்
பாகத் துதித்த மத்யபுரி மரகதத்தைப் பணிகுவனே.

18. அலைவாய்த் துரும்பினுடனுட்டும் பாசத் தழுந்துவதோ
கலைதேய்ந்த வாரக்கங்குலின் நின்று கலங்குவதே
சிலைவாங்கும் வேடன் கணைமாவிறைச்சி சிரித்து வுண்டு
மலைபோன்ற வில்லைக் காமேந்து மீசன் மரகதமே.

19. முனைநாடி வென்ற போகீசர்பேரின்ப முறை யைவிட்ட
வினையா லுதித்த பாழுஞ்சரீர மிதுமெய் யாகுமோ
மனையாட்டி மக்கள் துணையாவரோ வள்ள மத்தியபுரி
தனைநாடி வந்து மரகதத் தாழ்க்கு முடி தாழ்த்தினனே.

20. சிற்றின்பக் கடலிற் சிக்குண்டு கரைகாணு தேங்கினவன்
மற்றின்ப நாட வழியறியாது மயங்குவதோ

கற்றுத் தெளிந்த நித்தியானந்தக் கடல் படிந்து
பெற்றுத் திவர்ந்த பெருமாட்டி மரகதப் பெண்ணரசே.

21. அஞ்ஞானக் காட்டில் விளையாடி மதி கெட்டலைந்த நெஞ்சே
விஞ்ஞான சொரூபந் தனைநாடி யோக வினைபுரிந்தால்
மெஞ்ஞான வீட்டில் நடமாடு மரகதமேல் வியலாள்
எஞ்ஞான்று மின்பக் கடலாடுமுத்தி வீடேற்றுவளே

22. செல்விழி மாதர் சிற்றின்ப மயக்கச் சிக்கறுத்து
நால்வழி யேற்றி மேல்வழி நோக்கி நன்னெறிவரால்
கால்வழி மாறிப் போம்வழி யோடக் கண்ணிடையில்
மால்நிற மேனி மரகத வல்லி வரந்தருமே.

23. வெட்டப் படுமர மேலேறிய பசுமீன் மேதுபோல்
கட்டுண்ட வாசை கனன்றோடிக் காசுசிக் கன்னியிலே
பட்டுண்ட ஞானப் பரம்பொருட் டேனைப் பருகுதற்குப்
பொட்டுண்ட நுதலாள் மரகதவல்லி பதம் போற்றினனே.

24. மூலத் துதித்த வகங்கார மாய்கையில் மூளைத்தமனக்
கோலந் துணர்ந்த சிவனும் பக்திக் கொம்புதலை
மேலிற் பழுத்த ஞானப்பழத்தை வேண்டி நிற்கப்
பாலிற் சுவைத்த மொழிப்பசு மரகதப் பைந்தொடியே.

25. ஓங்கார வடிவ மரகதவல்லி தொண்டர்க் குறைத்தமறை
பாங்கான சாதனம் பண்ணுவீ ரென்றுமொழி பகருதையோ
சாங்காலம் வந்தபோ தேங்காதே திருநிழலைத் தஞ்சமென்று
லாங்கார மறவி நீங்கான பாசத் தறுப்பவளே.

26. என்பிலா வுடலை யிரவிகாய்ந் தெரிக்குமே னுயிர்மே
லன்பிலா தவரை யறங்காய்ந்து கொல்லு மவனிமிசை
நன்பன் மாதுலரைப் பண்பிலா தேசி நகைத்தவரைத்
துன்புறச் செய்யு மூவிலைச் சூலத்திற் றுளைப்பவளே.

27. பூதங் களற்றுப் பொறியற்று வஞ்சப் புலனுமற்றுப்
பேதங் குலைந்த காலத்துன் நாமத்தை பேசயாட்டேன்
நாதங் கடந்த சைதன்ய வாழ்வு நமக்களிக்க
வேதம் முடிவில் நடமாடும் மரகதத்தை வேண்டினனே.

28. முத்திக்கு வித்தாக முதிர்ந்த சுவைஞான முருகனிட
பத்திசகி ரங்கிப் பராசத்தி வேலொன்று பரிசளிக்க

வெத்திக்கு மாண்ட சூர்மாளச்சங்கர வேலெவிந்தோன்
தித்திக்குந்தாயே மத்தியபுரி மரகதத்தேமொழியே.

29. துப்புடைய மனமதனிற் பிறர்குற்றம் பலபேசித் தூஷித்தோ [ரும்
வைப்புடைய பிறர்பொருளை வழிமறித்து வெளவியுயிர் வதை [செய்தோரும்
கற்புடைய பாவையரைக் கலந்தோரும் பொன்கண் மனக் [கசட்டினோருங்
கைப்புடைய பிறவியினி லழுந்தி மரகதத்தினருட் கண்ணி [லரே.

30. பூப்போல மணமுடைய புண்ணியமே மிகுந்து பவப் பொ [றையைப் போக்கிக்
காப்பாளக் கங்கை குலச்சாத்தந்தை கோத்திரத்தார் கட்டுங் [கோயில்
நாப்பாடும் பாவலரு முனிவர்களு மத்தியபுரி நடந்துவந்து
தூப்பான தவமியற்று மரகதத்தி னிருகழற்குத் தோத்திர [மே

31. கூவலூர் மத்தியபுரிக் கோயில்வாழ் பெருமாட்டி கொன்றை [மாலை
பூவலோர் வர்ணித்த பொருட் போலப்பனை ஞன்மகன் [புனைந்தமாலை
நாவலோர் பிழைபொறுக்கப் பேரின்ப வீடளிக்க நளின [முள்ள
நாவினல் வேதமொழி மரகதத்தின் திருப்பாதம் நண்ணு [வமே.

முற்றிற்று.

பாண்டிய னீன்ற மீனாக்ஷி என்ற மெட்டு.

இராகம் தோடி.] [தாளம் ஆதி.

பல்லவி.

கூவலூரம்மா—மரகத வல்லியென் னம்மா
நன் மங்கலங் கூவலூரம்மா

## அநுபல்லவி

நாவலோர் துதித்த மரகதமே     உந்தனை நம்பினேன் நானே
செங்கோடன் நவிலுங் கவிதானே     மத்திபபுரி     (கூவ)

## சரணங்கள்.

சங்கரன் தேவியே     நடன சிங்காரி
தன்னருளைக் கோரி     சரணமென

சந்தத மூனது
கந்த பத மலரை
யந்தி பகலு நினை
யுந்திரு வடியவர்

தங்களுக்குபகாரி     ஒப்பாரி
தற்பரமன்பாரி     நலமுள்ள     (கூவ)

காலனார் பாசமெடுப்பானே     யெந்தனைக்
கட்ட வருவானே     யப்போது

காசு மனைவிமக
ளாசை பெரியவிசு
வாச மனிதமென
வேச வுயிருடலைக்

கலங்கிடச் செய்திடாமலே     யுன்பாதக்
கருணைபுரிவாயே     கனமுள்ள     (கூவ)

மானிடச் சென்மமிதுதானே     உலகில்
வாழும் பிணமாமே     சுணாகரி

வயிறு நிறைய நிணா
முறிய வருகு முன
மறிய தவமு நிலை
புரிய வருளு மெனக்

கார் துணை செப்பு மரகதமே     சாஷ்டாங்க
வணக்கஞ் செய்தேனே     வடியர் வாழ்     (கூவ)

2244 53

இராசம் சிந்து-பைரவி.] [தாளம் ஆதி.

பல்லவி.

காசுதியாந் திருவாதிரைக் கந்தகீர்த்திப் பூண்டவலூரில்
கண்டானென்றுந் கொண்டாடிந்திருக் (காசுதி)

அநுபல்லவி.

காசுதி திருவாதிரைக்காசுதி கண்டபிரானுக்கத்தாசுதி
ஆட்சியில்லை யறியுங்காசுதி சுருதிமுடிவில்
சந்தரப்பாத நின்றகண்ஞானக் (காசுதி)

நாளாறு தந்தவங்காசுதி நாதருமையுநடனக்காசுதி
கால்தூக்கியாடினகாசுதி சனகசபையில்
காரணப்பொருளாய் நின்றவைதீகக் (காசுதி)

ஆதிபந்த மானகாசுதி ஆறயிராறு சமயக்காசுதி
சோதித்த சைவக்காசுதி துரியநிலையில்
தொந்தி மித்மீதாமென வந்தகண் காசுதி (காசுதி)

---

# திருநடன வண்ணம்.

---

தானதந்தன தத்தத்தனதானன தாத்தானதத்தன
தந்தத்தனதானந் தானதத்ததன
தானத்தனதானத்தன தையத்தனதானந்
தத்தத்தனதத்தத்தன தையத்தனதானந்
தானதத்தனதத்தத்தன தானந் தானதானந்
தனனதானனா.

வேதவித்தக சத்திந்திருபாகனர் பூலோகமீதினில்
விளங்குஞ்சோதிப் பாதங் கஞ்சமே
வேணும்படியேவந்தவர் கஞ்சனும்மாலும்
விண்டும்புவி ரண்டுங்கடை கண்டவர்தேடும்
தாபதர்முன்பு சத்தியுடனுடுந் தாராதாருயிர்
வடிவநாதனே
தாண்டவம்புரி சங்கரநாமனை நாடோருந்துதித்த
தண்டமிழ்பேசுந் தாமம் புனைந்தவா

சாதங்கறிநாவென்று சிறுத்தொண்டன்பிள்ளை
தன்னைக்கறிசமைத்திட அறுப்புண்டபின்னை
கூவியழைக்க வந்தசிராளன் கோலங்காண
நின்றவிஸ்வரா
லோககண்டக திரிபுரசூர்பட ரூபத்திரிமூர்த்தி
யுத்தத்துக்கேகின பூமிரதம்மா
சூரியனுஞ் சோமனுஞ் சக்கரமதாக
துங்கத்திருமறைப்பரி பூட்டியதிலோட
வேதன்நடத்த மலையைவில்லாக வாழிக்கூடு
விஷ்ணுபாணமே
காமனையெரித்த மூக்கண்ணுடையவா பிச்சாடனசுந்தர
கங்கையைவைத்த சந்திரசேகரமே
காலன்வர ஓலமிடு மார்க்கண்டனைக்காத்து
கடலின்விடமமுதுண்டதி தேவரைக்காத்து
தாலப்பிரணவ மந்திரம்பேசித் தூக்கியாடும்
நந்திவாகனா
நீதமுற்றறு பத்துமூவருந் தோத்திரங்கள்செய்து
நித்தியப்பரமசொரூபம்பெற்றனரே
ஞாலத்தொடுந்தாலத்தினிற் சுற்றித்திரிவேனை
சொந்தக்கவிதந்துன்னருள் ஞானந்தருவாயே
வேலவர்தகப்ப மெய்ப்பொருள்மூர்த்தி வீணைமீட்டி
விறகுவிற்றவா
யாதிகற்பக முடியப்பிர்மனார் கபாலமீச
னங்கையிலானந்தத் தாண்டவமாடுமே
ஆதிக்கொருநீதிப்பொரு ளுமையவள்நேசன்
எஞ்சுமுடிபத்துசா மானசெவ்வாயன்
யானையையுரித்துத் தோலையுடுத்த நாகரீக
ரூபரூபமே
மூலத்துதித்த குண்டலிசத்தியா லேயிர்தயத்தில்
மூட்டிப்பராபானுச் சீவன்தானன்னே
தேகக்கடமோடித்திரி பூதங்களைந்து
சித்தத்தொடுசுற்றம்மறி வானதுவொன்று
கூடிநின்றென்று பட்டதான்மாவே கோலஞான
மானசமாதியே

நீதிநன்மங்கலங் கூவலூரிலே மார்கழியாதிரை
நித்தனஞ்செய்த மத்தியபுரியீசனே
தேசப்பிரகாசற்கு நந்திதந்தொழுதேனே
நெஞ்சக்கனகல்லுக்கலி யல்லல்லறுத்தோனே
பாதிப்பெண்ணிடப் பக்கத்தில்வேதம் பாடியாடு
சுநாசனமூர்த்தியே

நாதர்வாழும் கைலைமீதிலே குபேரன்வாசனம்
நடத்தித்தசகண்டன் மலையைத்தூக்கினான்
நாரியொருபாகனிடக் கால்விரலூன்ற
நழுவிபசையிருபதா சாவணைப்பாடக்
கேட்டவரத்தை யீசருகவக் கேடிலாத
ராவணனென்றார்

பாதிமதியுங் கங்கையைச்சுமந்தவரமா விஜயராஜன்
பயின்றபெண்ணை மணந்துக்கொண்டவா
பாசுபதபாணமென வூசிமுனைமீதில்
பர்குணனுநின்றுதபங் கொண்டுன்னருள்கேட்ட
பாதிநாட்டுப் பகையைமீட்டப் பாண்டவர்க்கஸ்திர
மளித்தபரமனே

வாணிதென்கரை மத்தியபுரிலிங்கமே திருவாதிரைநாளில்
வருகும்பவனி வண்ணம்பாரம்மா
வாசிப்பரிமேலுறுந் திருத்தொண்டர் கொண்டாடும்
வஞ்சிபணைக்கங்கணக்கைச் சுந்தரம்பாடும்
மாணிக்கம்வருகச் சம்மந்தர்கூட வந்தவப்ப
ஞான நால்வரே

தேனின்சுவைத் தேவாரம்பூண்டவா கூத்தாடுஞ்சபையில்
திருக்கழல்தூக்கி மாறியாடினனே
சேணுடவர்காணுதது வானதிருப்பாதந்
சித்தர்க்கருள்வித்தித்தநு சின்மயபோதந்
தேடிநின்ற முப்பத்துமுக்கோடி தேவர்தேவ
தேவநாமமே

பேதகம்பெற்ற பருவப்பெண்களா வோர்வார்த்தைகேளும்
பிச்சைக்குவந்த ததட்டிச் சொல்லாததே
தேவன்னடிதேடித் தரிசித்த கற்பாகுஞ்

ந்தைக்குள்நெஞ்சந்தொடி வஞ்சகம்போக்கும்
ரியசித்தி கற்புமுண்டாச்சு காலனேவும்
சயிறாமிற்றதே
ந்துகின்ற சினத்திஞ்ஞாலத்தே தேசோதியாணிட
ஜன்மமெத்தனே லட்சங்கோடியோ
தஜக்கினையாவந்திலும் முருகனைப்பெற்றான்
த்திமலைவாளக் கணபதியையும்பெற்றான்
தூதுநடந்த சுந்தரர்க்காகச் சோமசுந்தர
ராஜசிங்கமே
ராடிவருத்த வருணைத்தார்களே யாரூர்த்ரதரிசனக்
காசந்தருவை யரனுஞ்சுற்றுமே
ராஜிக்குருவாகப்பெருநந்திமேலேறிச்
சந்தக்கவிசொந்தப் பிரபந்தங்களைக்கோரி
பாண்டிவடிவ வய்மையுங்கூட வாடவாடல்
முப்பத்திரண்டுமே
பாதிரிபுன்னை சண்பகமல்லிநான் பூரத்தியநாதன்
பதத்தைநினைத்து துதித்தகபசியே
பாசத்தொடுவேசந்தரித்துத் திரியாதே
பஞ்சமுகன்பத்துக்கையனைப் பணிவாயே
மாபத்தியபுரி யரனார்பாதம் மாறியாடின
னுண்ணைப்போற்றியே.

எட்டுத் திசைவா பூசர சராசரம்
நட்ட மாடுசிவன் செய லானதே
திட்ட மான திரு வாதிரைக் காட்சி
பட்டக்கார் பிரசுப் பதிப் பானதே.

வாழி நான்மறை வானவ ரானவர்
வாழி வாசவர் கேசவர் மாதவர்
வாழி யிக்காட்சி படிப்பவர் கேட்பவர்
வாழி [illegible]னடியவர் வாழியே.

முற்றுப்பெற்றது.

925:47
221
224453